10.01.2019

அ.வ.எண்: 34/2016

பெயர்: முனிரத்தினம்

த/பெ. துரைசாமி

வா.சா:**1**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தாவா சொத்து ஆற்காடுகுப்பம் கிராமத்தில் உள்ளது. கொள்ளப்பள்ளில் கிராமத்தில்உள்ள சொத்து இவ்வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றால்ஆம். நானும் எனது சகோதரும் 25 வருடங்களுக்க முன்பு வாய்வாச்சாவாக பாகம்பிரித்து கொண்டு ஆலுக்கு 38 செண்ட் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதில் 38 செணட்டில் 19 செண்ட் 1ம் பிரதிவாதிக்கும் 19 செண்ட் 2ம் பிரதிவாதிக்கு நான் விற்றுவிட்டேன் என்றால் இல்லை. கொள்ளப்பள்ளியில் கிராமத்தில் உள்ள சொத்தையும் நான் விற்றுவிட்டேன என்றால சரியல்ல. கொள்ளப்பள்ளியில் உள்ள சொத்து எனது தந்தை சுயாஜிதமாக சம்பாதித்து எனது தாயார் எங்கள் நால்வருக்கும் செட்டில் மெண்ட் செய்து எனக்கு கிடைத்த பாகத்தை நான் விற்பனை செய்துவிட்டேன். 1979 ல் நான் பெங்களூருக்கு சென்று விட்டேன். எனது பாகத்தை விற்று விட்டதால் தாவா சொத்தின் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு தான் உரிமையுள்ளது என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் 2007 ல் 4ம் பிரதிவாதிக்கு சொத்தை விற்று அது 4ம் பிரதிவாதியின் அனுபவத்தில உள்ளது என்றல் சரியல்ல. அதனால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு பொய்யானது என்றால் சரியல்ல. அது தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**